**2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30 ஆம் தேதி திங்கட்கிழமை**

**மாலை 4.00 மணிக்கு நகர் மன்றக் கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின்**

**நிகழ்ச்சி நிரல் முன்னிலை : திருமதி. ஆர்.ஜானகி.**

**பொருள் எண்.1**

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்களது மே - 2025 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.986/2023/சி1)

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.16390/2024/பிபிசி நாள்.27.05.2025 இன்படி தமிழ்நாடு சட்டமன்ற வரவு செலவு திட்டம் 2025-26 க்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான (மானியக் கோரிக்கை எண்.34) நான்காண்டு சாதனை மலர் புத்தகம் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மூலம் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் மற்றும் சிறப்பான செயல்பாடுகள் குறித்து தயாரித்து வெளியிடப்பட்டது. மேற்காணும் சாதனைமலர் புத்தகம் அச்சிடப்பட்டு தயார் செய்யப்பட்டதற்கான செலவினப்பட்டியல் தொகை ரூ. 7500/-ஐ Punjab National Bank கிளைக்கு தொகையினை உரிய கணக்கிற்கு செலுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி ரூ.7,500/- ஐ சம்பந்தப்பட்ட வங்கி கணக்கிற்கு வருவாய் நிதியில் செலவு மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண். 1514/2025/இ1]

**பொருள் எண்.3**

கோட்டுவீரம்பாளையம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள OCEMS Plant இல் இயக்குதலும் மற்றும் பேணுதலும் பணிகள் மேற்கொள்ள 942/30.04.2025 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிக்கு 16.06.2025 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளன. ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.RL Technologies, No 2 Factory Road, Athur, Chengalpet -603101 | ரூ.10,96,043/- | மதிப்பீட்டு தொகையினை விட 15.55 சதவீதம் கூடுதல் |
| 2 | M/s.H2O Engineering and Technologies No.37, Devi Nagar Main Road , 200 Feet Ring Road, Kolathur, Chennai – 600039. | ரூ.11,87,647/- | மதிப்பீட்டு தொகையினை விட 25.21 சதவீதம் கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.RL Technologies, No.2, Factory Road, Athur, Chengalpet -603101 என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு தொகையினை விட 15.55 சதவீதம் கூடுதலாக வழங்கி உள்ளார். எனவே, மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை மதிப்பீடு தொகையினை விட குறைத்து வழங்க கோரி விலை குறைப்பு கடிதம் (Negotion Letter) வழங்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனத்திலிருந்து 19.06.2025 அன்று பெறப்பட்ட பதில் கடிதத்தில் மதிப்பீட்டு தொகையினை விட 0.16% குறைவு , GST 18 சதவீதம் உட்பட குறைத்து வழங்கியுள்ளார். எனவே, M/s.RL Technologies, No 2 Factory Road, Athur, Chengalpet -603101 என்பவர் வழங்கிய விலை குறைப்பை ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- ❖ மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண்.548/2022/இ1]

**பொருள் எண்.4**

தமிழக அரசின் நான்காண்டு சாதனைகள் குறித்த விளம்பரம் தினகரன் மற்றும் தினத்தந்தி தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்யப்பட்டது. செய்தி தாளில் விளம்பரம் செய்யப்பட்ட நிறுவனம் KAL Publications மற்றும் தினத்தந்தி நிறுவனத்தினரால் பில் பட்டியல் தொகை ரூ.38,385/- ஐ வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. எனவே, ரூ.39,000/- தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- ❖ மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண்.548/2022/இ1]

**பொருள் எண்.5**

சத்தியமங்கலம் நகராட்சியில் KNMT திட்டத்தின் கீழ் 2023-24ஆம் ஆண்டு புதியதாக கட்டப்பட்ட அறிவுசார் மையத்திற்கு Care Taker பணியிடத்தினை அமைக்க தெரிவிக்கப்பட்டதில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் வெளிக்கொணர்வு முகமை மூலம் நிரப்பி SANKAR LABOUR CONTRACT நிறுவனம்

மூலம் பணியாளரை பணியமர்த்தப்பட்டுள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி (ந.க.எண்.2878/2023/பி1, நாள்.31.01.2024) அறிவுசார் மையத்தில் பணிபுரியும் பணியாளருக்கு ஊதியம், தினசரி செய்தித்தாளின் கட்டணம் மற்றும் இதர செலவினம் மேற்கொள்ளவும், 2025-26 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.4,00,000/- இலட்சம் தேவைப்படுகிறது. இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- ❖ மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண்.866/2024/பி3]

**பொருள் எண்.6**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பராமரிப்பிலுள்ள பள்ளியில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பு செய்திட தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை நியமிக்க அரசாணை எண். G.O.(MS) No.166 நாள்: 23.11.2016 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் படி சத்தியமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் விவரப்படி பள்ளிகள் உள்ளன.

| வ.எண். | பள்ளிகள் விவரம் | பணியாளர்கள் |
|---|---|---|
| 1. | நகராட்சி ஆரம்பப்பள்ளி, ரங்கசமுத்திரம் | 2 |
| 2. | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ரங்கசமுத்திரம் | 3 |
| 3. | நகராட்சி ஆரம்பப்பள்ளி, ஆர்.எம்.பி.நகர் | 2 |
| 4. | நகராட்சி நடுநிலைப்பள்ளி, சத்தியமங்கலம் | 3 |
| 5. | நகராட்சி துவக்கப்பள்ளி, கொளத்தூர் | 2 |
| 6. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சத்தி | 4 |
| | மொத்தம் | 16 |

எனவே, மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியமாக நபர் ஒன்றுக்கு பொதுப்பணித்துறை பட்டியல்படி, ரூ.589.39/- வீதம் (E.P.F / E.S.I.உடன்) நகராட்சி நிர்வாக பங்குதொகை 5% உள்பட 16 ஒப்பந்த பணியாளர்கள் 01.09.2025 முதல் 31.08.2026 வரை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாளர்கள் வேண்டி ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மற்றும் ஈரோடு மாவட்ட அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.34,90,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- ❖ மன்றம்அனுமதிக்கலாம்.
- ❖ பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண். 1350/2023/எச்1]

**பொருள் எண்.7**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உள்ள 27 வார்டுகளில் தினந்தோறும் உருவாகும் மறுசுழற்சி செய்ய இயலாத

மக்காத பிளாஸ்டிக் பேப்பர்கள் போன்ற கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு பிளாஸ்டிக் கழிவுகளை JCB இயந்திரம் மூலம் ஏற்றி அனுப்பி வைப்பதற்கும் மற்றும் எரிக்க இயலாத பொருட்களை (INERT MATERIALS) கொட்டப்பட்டு வரும் கழிவுகளை ஓரமாக ஒதுக்கி சுத்தம் செய்து தரும் பணிக்கு அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,45,000/-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது, மேற்கண்ட பணிகளுக்கு 10.06.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, |
|---|---|---|
| 1 | Vino construction<br>Sathyamangalam 638451 | 2200/-per |
| 2. | Mr.P.Gopalakrishnan<br>O Rajeev Nagar Sathy-1 | 2400/- per |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Vino construction, sathyamangalam என்னும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- மன்றம்அனுமதிக்கலாம்.
- பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண். 1044/2025/எச்1]

**பொருள் எண்.8**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பணிக்கு தேவையான தளவாட சாமான்கள் வழங்கும் பணியை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 10.06.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது .

| வஎண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை | Aleem Traders ஒப்பந்தப்புள்ளி ஒரு பொருளின் மதிப்பீடு தொகை ரூ. | DK Electricals ஒப்பந்தப்புள்ளி ஒரு பொருளின் மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மண்வெட்டி பெரியது | 1செட் | 380 | 450 |
| 2 | மண்வெட்டி சிறியது | 1செட் | 350 | 380 |
| 3 | சவுல் | 1 | 645 | 700 |
| 4 | குப்பை அள்ளும் அலுமினிய குண்டா | 1 | 800 | 830 |
| 5 | டிச்சு கொக்கி | 1 | 365 | 400 |
| 6 | தடிமார் | 1 | 780 | 800 |
| 7 | மூங்கில் கை சீமார் | 1 | 80 | 110 |
| 8 | பிளாஸ்டிக் காரைச்சட்டி | 1 | 100 | 130 |

| வஎண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை | Aleem Traders ஒப்பந்தப்புள்ளி ஒரு பொருளின் மதிப்பீடு தொகை | DK Electricals ஒப்பந்தப்புள்ளி ஒரு பொருளின் மதிப்பீடு தொகை |
|---|---|---|---|---|
| 9 | பல்லு கொத்து பெரியது | 1 | 160 | 190 |
| 10 | பல்லு கொத்து சிறியது | 1 | 130 | 160 |
| 11 | மூங்கில் கூடை பெரியது | 1 | 1000 | 1100 |
| 12 | மூங்கில் கூடை சிறியது | 1 | 500 | 550 |
| 13 | அருவாள் பெரியது | 1 | 220 | 250 |
| 14 | அருவாள் சிறியது | 1 | 200 | 240 |
| 15 | பிக்காஸ் | 1 செட் | 370 | 390 |
| 16 | கடப்பாரை | 1 | 620 | 850 |
| 17 | மரம் அறுக்கும் இயந்திரம் | 1 | 9800 | 12500 |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Aleem Traders என்னும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- மன்றம்அனுமதிக்கலாம்.
- பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண். 1000/2025/எச்1]

**பொருள் எண்.9**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.192/2025/SBM-1 நாள்.18.03.2025 இன்படி தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனை மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் பொதுக்கழிப்பிடம் கட்ட ரூ.2.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர் மன்றத்தீர்மானம் எண்.937/28.03.2025 இன்படி நகராட்சி பங்குத்தொகைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 09.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 15.05.2025, 22.05.2025, 26.05.2025 ஆகிய தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டு 26.05.2025 அன்றைய தேதியில் இப்பணிக்கு கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.வி.ரங்கசாமி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.2,08,000.00 | 0.17 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.2,11,350.00 | 1.43 சதவீதம் கூடுதல் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய திரு.வி.ரங்கசாமி, ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- மன்றம் பதிவு செய்யலாம்.

[ந.க.எண். 737/2022/இ1]

**பொருள் எண்.10**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் மக்களுடன் முதல்வர் (Phasse-III) எனும் திட்டத்தின் கீழ் பொது மக்கள் கோரிக்கைகள் அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய முகாம்கள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி பகுதியில் 17.07.2025 ஆம் தேதி முதல் மொத்தம் 11 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நான்கு முகாம்கள் நடைபெறும் விவரம்

| வ.எண் | முகாம் நடைபெறும் இடம் | வார்டுகள் | முகாம் நடைபெறும் தேதி | நேரம் காலை முதல் மாலை வரை |
|---|---|---|---|---|
| 1 | சுந்தர் மஹால் | 1,2,3 | 17.07.2025 | 10.00 முதல் 3.00 மணி |
| 2 | சுந்தர் மஹால் | 4,6 | 24.07.2025 | 10.00 முதல் 3.00 மணி |
| 3 | சுந்தர் மஹால் | 5,8 | 31.07.2025 | 10.00 முதல் 3.00 மணி |
| 4 | சுந்தர் மஹால் | 7,9,10 | 07.08.2025 | 10.00 முதல் 3.00 மணி |

மேற்படி திட்டத்தின் கீழ் பொது மக்களிடமிருந்து பெறப்படும் நகராட்சி நிர்வாகம் தொடர்பாக பின்வரும் சேவைகளுக்கான மனுக்களை UTIS மென்பாருளுடன் இணைப்பு ஏற்படுத்தி பதிவேற்றம் செய்து இம்மனுக்களுக்கு மக்கள் சாசனத்தில் (Citizen charter) தெரிவிக்கப்பட்டுள்ள நாட்களுக்குள் தீர்வு காணப்பட்டு பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். தீர்வு காணப்படாத மனுக்களுக்கு நடவடிக்கை விபரத்தினை உரிய செயல்முறை ஆணையாக பிறப்பிக்க வேண்டும்.

1. சொத்துவரி விதிப்பு செய்தல்
2. சொத்து வரி பெயர் மாற்றம்
3. குடிநீர் இணைப்பு வழங்குதல்
4. வர்த்தக உரிமம் (Trade License)
5. பிறப்பு இறப்பு சான்று வழங்குதல் / திருத்தங்கள்
6. கட்டிட அனுமதி வழங்குதல்
7. திடக்கழிவு மேலாண்மை
8. தெருவோர வியாபாரிகள் நலத்திட்டம் (PM SIVANIDHI)

மேற்படி முகாமில் வருவாய் துறை, மின் வாரியம், ஊரக வளர்ச்சித் துறை, உள்துறை, பள்ளி கல்வித் துறை, கூட்டுறவு துறை, வீட்டு வசதி துறை மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை உள்ளிட்ட பிற துறை அலுவலகங்களும் பங்கேற்க உள்ளன.

மேற்படி முகாம் பொது மக்கள் அறியும் வண்ணம் உரிய அறிவிப்பு செய்து முகாம் சிறப்பாக செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது..

எனவே மேற்கண்ட முகாமிற்கு கனிணிகள் , பிரிண்டர்கள், மின்சாதன வசதி , இணைய சேவை இணைப்பு , ஜெனரேட்டர் , டேபிள், சேர், மைக்செட், பேனர், நோட்டீஸ், Flex, ஆட்டோ விளம்பரம், லோக்கல் டிவி, டோக்கன், பேப்பர் விளம்பரம் , போட்டோஸ், வீடியோ, பணியாளர்களுக்கு டீ , காபி, ஸ்னேக்ஸ், மதிய உணவு போன்ற அத்தியாவசிய செலவுகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- ❖ மன்றம்அனுமதிக்கலாம்.
- ❖ மேற்படி தொகை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

[ந.க.எண். 2432/2023/சி1]

**பொருள் எண்.11**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் நகராட்சியில் நுகர்வோர் பாதுகாப்புக் குழு காலாண்டுக் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நடத்துவதற்கு ஏற்படும் இதர செலவினங்கள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினத் தொகை. ரூ.10,000/- ற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- ❖ மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.882/2025/எச்1)

**பொருள் எண்.12**

சத்தியமங்கலம் நகராட்சிமொத்தம் 27 வார்டுகள் உள்ள தெருக்களில் இருபுறம் செடி கொடிகளை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மை பணியாளர்களை வைத்து அகற்றுவது

மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள செடி கொடிகளை பணியாளர்களை கொண்டு தொய்வின்றி அகற்றும் விதமாக புல்வெட்டும் இயந்திரங்கள் 3 பிரிவுகளுக்கு தனித்தனியே மொத்தம் 3 எண்ணிக்கை வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினமாக தொகை ரூபாய். 75,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

- ❖ மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.1843/2025/எச்1)

இடம் : சத்தியமங்கலம்
தேதி : 24.06.2025

**நகர்மன்றத்தலைவர்**
**சத்தியமங்கலம் நகராட்சி**

**2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நகர் மன்றக் கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் (டேபிள் அஜன்டா)**

**முன்னிலை : திருமதி. ஆர்.ஜானகி.**

**பொருள் எண். 13**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட குள்ளங்கரடு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த குடியிருப்பில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரானது கிட்டையா காலனி, பிரிட்டோ காலனி, உருமையன் சாலை, திப்புசுல்தான் சாலை வழியாக சத்யா தியேட்டர் ரோட்டில் அமைந்துள்ள பாதாள சாக்கடை இயந்திர துளையில் கொண்டு சேர்க்கும் பணிகள் முடிக்கப்பட்டது. இப்பணியினை மேற்கொள்ளும் போது வெட்டப்பட்ட தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகள் சீரமைக்க கட்டணமாக ரூ.35.00 இலட்சத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நகராட்சிக்கு செலுத்தியுள்ளது. மேற்கண்ட பணிக்கு உரிய நிர்வாக அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

- ❖ மன்றம் அனுமதிக்கலாம்.

**[ந.க எண். 548/2022/இ1]**

**பொருள் எண். 14**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 119.670 கி.மீ. ஆகும். நகராட்சி சாலையின் ஓரங்களில் மழை காலங்களில் அதிக அளவிலான செடிகள் மற்றும் புதர்கள் ஏற்பட்டு சாலை போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதாலும், மழைநீர் வடிகாலில் அடிக்கடி சேறுகள் தேங்கி உள்ளதை அப்புறப்படுத்தவும், மழை வெள்ளத்தில் மழை நீரை கரையோர பகுதியிலிருந்து உடன் அப்புறப்படுத்தவும், குடிநீர் விநியோகம் தொடர்பான பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காகவும் அவ்வப்பொது JCB வாடகைக்கு எடுத்து பணிகள் மேற்கொள்வதால் இதன் ஆண்டு செலவினம் மிக அதிகமாக ஏற்படுவதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சிக்கு புதியதாக மண்அகற்றும் இயந்திரம் (ஜேசிபி) தேவைப்படுகிறது. இந்த இயந்திரத்தின் மூலம் பல வேலைகள் விரைவில் மேற்கொள்ள இயலும். இந்த வாகனம் கொள்முதல் செய்ய ஏதேனும் அரசு மானிய நிதியுதவித் திட்டங்களில் சேர்த்து கொள்ள உரிய கருத்துரு அனுப்ப நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

- ❖ மன்றம் அனுமதிக்கலாம். **[ந.க எண். 548/2022/இ1]**

**பொருள் எண்.15**

வார்டு எண்.26 திருநகர் காலனி 6 வது வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் மழைநீர் வடிகால் தனியாரால் அமைக்கப்பட்டு போதுமான சரிவு இல்லாததால் மற்றும் கழிவு நீர் தொடர்ந்து செல்ல வடிகால் அமைக்காமல் இடைவெளி உள்ளதால், கழிவு நீர் தேங்கி வருகிறது. மேலும், அதே வார்டில் பாலவிநாயகர் கோவில் தெரு, திருநகர் காலனி பகுதிகளில் உள்ள கழிவுநீர் வடிகால்கள் மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மாநில நெடுஞ்சாலை வடிகாலுடன் இணைக்கவும் வேண்டியுள்ளது. மேலும், வார்டு எண்.9 கட்டபொம்மன் நகர் சிறுபாலம் பழுது ஏற்பட்டுள்ளதால் அதை புதியதாக அமைக்கவும், மேற்கண்ட இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கவும் உரிய மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் நகராட்சியின் வருவாய் நிதி 2025-26ல் இருந்து மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

- மன்றம் அனுமதிக்கலாம்.

**[ந.க எண். 548/2022/இ1]**

**பொருள் எண்.16**

வார்டு எண்.3 இல் உள்ள சிறுபாலங்கள் பழுது ஏற்பட்டு கழிவுநீர் தேங்கி நிற்கிறது. மேற்படி பணியின் அவசியம் கருதி சிறுபாலங்கள் அமைத்து தரக்கோரி அங்குள்ள பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனவே, புதியதாக சிறுபாலங்கள் அமைக்க ரூ.1.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை 2025- 26 ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

- மன்றம் அனுமதிக்கலாம்.

**[ந.க எண். 548/2022/இ1]**

**பொருள் எண்.17**

2025-2026 ஆம் ஆண்டு வருவாய், குடிநீர், கல்வி நிதி ஆகிய நிதி திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 24.06.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

<u>**வருவாய் நிதி திட்டம் - 2025-26**</u>

1)வேலையின் பெயர்- நகராட்சி குப்பை கிடங்கில் உள்ள நுண் உயிரி மையம் கட்டிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை-ரூ.5.50 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.4,58,975.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.09 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.4,65,398.00 | மதிப்பீட்டு தொகையினை விட 1.31 சதவீதம் கூடுதல் |

2) வேலையின் பெயர் சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள எஸ்.ஆர்.டி கார்னர், கோம்புபள்ளம், அத்தாணி ரோடு ஆகிய பகுதியில் உள்ள உயர் மின் கோபுர தெருவிளக்கு பழுது பார்த்தல்.

மதிப்பீடு தொகை-ரூ.0.95 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மெர்ஸ்.ஹைட்ரோமெக் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், ஒப்பந்ததாரர், கவுந்தப்பாடி. | ரூ.77.400.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.77 சதவீதம் குறைவு |
| 2 | மெர்ஸ்.குமரன் இன்ஜினியரிங் ஒப்பந்ததாரர், ஈரோடு | ரூ.90,000.00 | மதிப்பீட்டு தொகையினை விட 15.38 சதவீதம் கூடுதல் |

3) வேலையின் பெயர்- நகராட்சி அலுவலகத்தில் உள்ள குளிர் சாதன பெட்டிகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை-ரூ.0.75 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை. | ரூ.63,450.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.08 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.64,500.00 | மதிப்பீட்டு தொகையினை விட 1.57 சதவீதம் கூடுதல் |

4) வேலையின் பெயர்- திருவள்ளுவர் திடல் சமுதாய கழிப்பிடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல்

மதிப்பீடு தொகை-ரூ.1.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.81,530.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.23 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.88,503.00 | மதிப்பீட்டு தொகையினை விட 8.30 சதவீதம் கூடுதல் |

5) வேலையின் பெயர்- வார்டு எண்.2 சந்தனமாரியம்மன் கோவில் வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் பைப் கல்வெர்டு கட்டுதல்.

மதிப்பீடு தொகை-ரூ.3.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை | ரூ.2,48,906.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.06 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்,சத்தியமங்கலம் | ரூ.2,50,812.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.70 சதவீதம் கூடுதல் |

6) வேலையின் பெயர்- வார்டு எண்.5 அண்ணா நகர், காமராஜ் நகர், வார்டு எண்.11 காவல் நிலையம் எதிர்புறம் ஆகிய பகுதியில் சிறுபாலம் கட்டுதல்

மதிப்பீடு தொகை-ரூ.5.80 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை. | ரூ.4,79,167,00 | மதிப்பீட்டு தொகையினை விட 1,17 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.4,84,425.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.08 சதவீதம் கூடுதல் |

7)வேலையின் பெயர்- வார்டு எண்.23 பேருந்து நிலையத்திற்கு செல்லும் வழியில் ஸ்டுடன்ஸ் ஜெராக்ஸ் அருகில் சிறுபாலம் அமைத்தல்.

மதிப்பீடு தொகை-ரூ.2.10 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.1,73,018.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.24 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.1,76,534.00 | மதிப்பீட்டு தொகையினை விட 1.79 சதவீதம் கூடுதல் |

8)வேலையின் பெயர்- வார்டு எண்.24 ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல்.

மதிப்பீடு தொகை-ரூ.3.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.2,47,808.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.14 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.2,50,755.00 | மதிப்பீட்டு தொகையினை விட 1.05 சதவீதம் கூடுதல் |

9) வார்டு எண்.24 மற்றும் 25 இல் சிறுபாலம் அமைத்தல்.

மதிப்பீடு தொகை-ரூ.6.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.4,84,095.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.15 சதவீதம் குறைவு |
| 2 | M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.4,90,025.00 | மதிப்பீட்டு தொகையினை விட 1.07 சதவீதம் கூடுதல் |

<u>குடிநீர் நிதி - 2025-26</u>

1) கட்டபொம்மன் நகர் பகுதியில் சப்மெர்சிபில் பம்பு, ஸ்டாட்டர், மற்றும் பைப் பொருத்தும் பணி மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை-ரூ.1.10 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை. | ரூ.89.793.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.53 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.92,020.00 | மதிப்பீட்டு தொகையினை விட 1.93 சதவீதம் கூடுதல் |

2) ரங்கசமுத்திரம் தலைமை நீரேற்று நிலையத்தில் 20 குதி. சப்மெர்சிபில் பம்பு பழுது மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை-ரூ.1.32 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மெர்ஸ்.ஹைட்ரோமெக் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், ஒப்பந்ததாரர், கவுந்தப்பாடி. | ரூ.1,09,584.00 | மதிப்பீட்டு தொகையினை விட1.00 சதவீதம் குறைவு |
| 2 | மெர்ஸ்.குமரன் இன்ஜினியரிங் ஒப்பந்ததாரர்,ஈரோடு | ரூ.1,17,900.00 | மதிப்பீட்டு தொகையினை விட 6.52 சதவீதம் கூடுதல் |

3) வார்டு எண்.27 இல் மேட்டுபாளையம் சாலையில் குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை-ரூ.11.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | கிளவுட் ஹைடெக் இன்னோவேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஒப்பந்ததாரர், சென்னை | ரூ.8,76,488.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.01 சதவீதம் குறைவு |
| 2 | வோல்கா பவர் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஒப்பந்ததாரர், சென்னை | ரூ.8,80,110.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.40 சதவீதம் கூடுதல் |

4) இந்நகராட்சியில் உள்ள 27 வார்டுகளில் குடிநீர் வால்வு தொட்டி அமைத்தல்.

மதிப்பீடு தொகை-ரூ.9.90 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை. | ரூ.8,01,120.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.18 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.8,23,363.00 | மதிப்பீட்டு தொகையினை விட 2.59 சதவீதம் கூடுதல் |

5) வார்டு எண்.9 தண்டல் ரஹமான் சந்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல்.

மதிப்பீடு தொகை-ரூ.2.00 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.1,58,939.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.14 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.1,64,545.00 | மதிப்பீட்டு தொகையினை விட 3.38 சதவீதம் கூடுதல் |

6) வார்டு எண்.27 இல் வெற்றிவேல் எடைமேடை அருகில் பைப் வடிகால் அமைத்தல்.

மதிப்பீடு தொகை-ரூ.0.95 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒ3ப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ,77,788.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.19 சதவீதம் குறைவு |
| 2 | M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ.80,703.00 | மதிப்பீட்டு தொகையினை விட 3.55 சதவீதம் கூடுதல் |

<u>**கல்வி நிதி- 2025-26**</u>

1) ரங்கசமுத்திரம் நகராட்சி பள்ளி வளாகத்தில் அங்கன்வாடி மையத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை-ரூ.0.30 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் | ரூ,23.824.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.95 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.24,965.00 | மதிப்பீட்டு தொகையினை விட 3.80 சதவீதம் கூடுதல் |

2) சத்தி -1நகராட்சி நடுநிலைப்பள்ளியில் RO Plant பொருத்துதல்

மதிப்பீடு தொகை-ரூ.1.50 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை. | ரூ,1,13,690.00 | மதிப்பீட்டு தொகையினை விட 0.23 சதவீதம் குறைவு |
| 2 | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். | ரூ.1,17,126.00 | மதிப்பீட்டு தொகையினை விட 2.78 சதவீதம் கூடுதல் |

1) வருவாய் நிதியில் வ.எண்.1,4,7,8 மட்டும் M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம், வ.எண்.2 மட்டும் மெர்ஸ்.ஹைட்ரோமெக் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், ஈரோடு, வ.எண்.3,5,6 மட்டும் திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை. வ.எண்.9 மட்டும் திரு.ஆர். ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம். மட்டும்.

2) குடிநீர் நிதியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வ.எண்.1 மற்றும் 4 மட்டும் திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை, வ.எண்.2 மட்டும் மெர்ஸ்.ஹைட்ரோமெக் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், ஈரோடு, வ.எண்.3 மட்டும் கிளவுட் ஹைடெக் இன்னோவேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஒப்பந்ததாரர்,சென்னை. வ.எண்.5 மட்டும் M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர்,சத்தியமங்கலம். வ.எண்.6 மட்டும் திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம்.

3) கல்வி நிதியில் வ.எண்.1 மட்டும் M/s.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்ஷன், சத்தியமங்கலம். வ.எண்.2 மட்டும் திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை.

மேற்கண்ட அட்டவனையின்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

- ❖ மன்றம் அனுமதிக்கலாம்.

**[ந.க எண். 548/2022/இ1]**

**பொருள் எண்.18**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் தென்புற உணவகம் 14.08.2014 இல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் திரு. K. கார்த்திகேயன் என்பவர் 01.09.2014 முதல் மாதவாடகை ரூ.40,000 + GST ரூ.7200/- ஆக மொத்தம் ரூ.47,200/- செலுத்தப்பட்டு அரசு ஆணை எண்.92 இன் படி இருமுறை 15% உயர்வு செய்து 31.03.2023 ம் தேதி வரை மாதவாடகை ரூ.52,900/-+ GST ரூ.9522/- ஆக மொத்தம் மாத வாடகை ரூ.62,422/- செலுத்தப்பட்டு வந்த நிலையில் வாடகை அதிகம் என்பதாலும் நஷ்டம் ஏற்பட்டதாலும் மீண்டும் நீட்டித்துக் கொள்ள விருப்பம் இல்லை என நகராட்சி வசம் கடையினை ஒப்படைக்கப்பட்டதால் 01.04.2023 முதல் தற்போது வரை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 35 வது முறையாக கோரப்பட்டு ஏலம் கோர யாரும் முன் வரவில்லை. இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டு வருகின்றது. எனவே, மாத வாடகையினை அரசாணை எண். 66, நாள்.06.08.2024 இன்படி ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் நிர்ணய மாத தொகை (GST நீங்கலாக) ரூ.60,835/- க்கு 10% குறைத்து ரூ.54,751/- கோரப்பட்டும், இது நாள் வரை வாடகை அதிகம் என ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன் வரவில்லை. எனவே அரசாணை எண். 66, இன்படி கடையின் மாத வாடகையினை குறைத்து நிர்ணயம் செய்து அனுமதி வழங்க ஆவண செய்யுமாறு கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

புதிய பேருந்து நிலையம் தென்புறம் 20’x25’ அளவு கொண்ட உணவகம் புதியதாக பொது ஏலம் விடப்பட்டு திரு. K.கார்த்திகேயன் என்பவர் 01.09.2014 முதல் மாத வாடகை ரூ.40,000/.க்கு ஏலம் மூலம் எடுக்கப்பட்டு உரிமம் வழங்கப்பட்டது. தற்போது கடைசியாக அரசாணை எண்.92 இன் படி மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 15% சதவீதம் நீட்டிப்பு செய்து 31.03.2023 உடன் மாத வாடகை ரூ.52,900/-ற்கு (GST நீங்கலாக) வாடகை செலுத்தப்பட்டு வந்த நிலையில் மேற்கண்ட உணவகத்தின் பகுதியில் பேருந்துகள் அதிக அளவில் இல்லாததாலும், மக்கள் கூட்டம் குறைவான நிலையிலேயே இருப்பதாலும், உணவகத்திற்கு பொது மக்கள் வரத்து குறைவாக உள்ளதால் உணவகத்தில் சரிவர வியாபாரம் இல்லாமல் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் கடை வாடகை செலுத்த இயலாததால் உரிமத்தினை தொடர்ந்து நடத்த இயலாது என உரிமதாரரால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்த்ப்புள்ளிகள் 35 முறைக்கு மேல் கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் வர முன்வரவில்லை, இதனால் நகராட்சிக்கு தொடர்ந்து வரக்கூடிய வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட கடையின் இருப்பிடப் பகுதி பொது மக்கள் வரத்து குறைவாகவும், பேருந்துகள் அதிகம் இல்லாத பகுதி என்பதாலும் கடையின் உரிமம் ஏலம் போகாமல் பல மாதங்களாக பூட்டப்பட்ட நிலையில் பொது ஏலத்தில் இருந்து வருகிறது. எனவே கடை காலியாக உள்ளதால் அவ்விடத்தினை சமூக விரோதிகள் தவறாக பயன்படுத்த ஏதுவாக அமைந்து விடும். எனவே நிதியிழப்பு ஏற்படாத வகையில் நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு கடை வாடகையினை அரசாணை எண்.66 இன் படி குறைத்து நிர்ணயம் செய்து ஆவண செய்யுமாறு கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**[ந.க எண். 1200/2020/எப்1]**

இடம் : சத்தியமங்கலம்
தேதி: 30.06.2025

**நகர்மன்றத்தலைவர்**
**சத்தியமங்கலம் நகராட்சி**